விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 315 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 13 திங்கட்கிழமை (30.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## என்னைப் பதவி விலக்க சுமந்திரன் யார்?



### சம்பந்தர் என்னிடம் கேட்டார் – மாவை

(யாழ்ப்பாணம்)

"என்னைப் பதவி விலக சொல்வதற்கு சுமந் திரன் யார்?" என சம்பந்தன் கேள்வியெழுப்பி யுள்ள தாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். 02



### அத்துமீறிய மீன்பிடி
## 37 மீனவர்களுக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வடக்கு கடற்பரப்பில் அத்து மீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைதான 37 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் அத்துமீறி நுழைந்து மீன் பிடி யில் ஈடுபட்ட நிலையில் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் 02

## நவம்பர் 13இல் வ.செ.திட்ட உரை

### பாராளுமன்றக் குழு ஒப்புதல்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்ட உரையை நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரக்குழு தீர் மானித்துள்ளது.

இது தொடர்பிலான நிகழ்ச்சி நிரல் பாராளுமன்ற விவகாரக் குழுவினால் 15

# வ.செ.திட்டத்தை தோற்கடிக்க சதி

## பாராளுமன்றம் கலைக்கப்படலாம்

(கொழும்பு)

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தினை தோற்கடிப்பதற்கான தீவிர முயற்சிகள் திரைமறைவில் இடம்பெற்று வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு கள் தோற்கடிக்கப்படுமாயின், வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு முடிவடைந்தவுடன் பாராளுமன் றினை கலைப்பது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்து வார் என அரசியல் ஆய் வாளர்கள் கருத்துரைத் 15

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

### ஆனைக்கோட்டையில் துயரம்



(ஆனைக்கோட்டை)

மின்சாரம் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாப கரமாக உயிரிழந்துள்ளார்.

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை பகுதி யைச்சேர்ந்த உதய குமார் உஷாந்தன் 15

## தமிழரசுக் கட்சியின் நிர்வாகத்தை ஒட்டுமொத்தமாக மாற்ற வேண்டும்


### அஸ்திரத்தை ஏவுகிறார் சீ.வீ.கே.சிவஞானம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட் சிக்கும், தமிழ் மக்களும் இடை யில் தற்காலிகமாக ஏற்பட் டுள்ள இடைவெளிகளை குறைத்து மீண்டும் உத் வேகத்துடன் பயணத்தை முன்னெடுக்க தலைமைத்துவ மாற்றம் அவசியமாகின்றது.

தலைமைத்துவ மாற்றம் என்பது வெறுமனே தலைவர் என்கிற தனிநபரை நோக்கிய விடயமாக கருதக்கூடாது. தலை வர், செயலாளர், பொரு ளாளர் உள்ளிட்ட 15

## குடும்பஸ்தர் அடித்துக் கொலை முல்லைத்தீவில் பயங்கரம்



(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப் பில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கைவேலி, மயில் குஞ் சன் குடியிருப்பில் நேற்று முன்தினம் இரவு 11 மணி 15

## உள்ளூராட்சி சபைகளுக்கான கொடுப்பனவுகள் இணைய வழியில்

### 2024 ஜனவரியில் அமுலாகும்

(கொழும்பு)

அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்குமான கொடுப் பனவுகள் எதிர்காலத்தில் இணையத்தள வழியாக மேற் கொள்ளப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற் றிய அவர் மேலும் கருத்துரைக் கையில்,

"உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான 15

## அடுத்த பாராளுமன்ற தேர்தலூடாக தொங்கு அரசாங்கமே அமையும்

### எவருக்கும் அறுதிப் பெரும்பான்மை கூட கிட்டாது – ஷான் விஜேலால் தெரிவிப்பு



(கொழும்பு)

அடுத்த பாராளுமன்றத் தேர் தலில் எந்தவொரு கட்சியாலும் அறுதிப் பெரும்பான்மையைக் கூட பெற முடியாத சூழ் நிலையே காணப்படுகின்றது என்று ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சியின் சிரேஷ்ட 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-7524) 076 825 7716 (ஆகாஸ்)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport
இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS (C-7523)

0777-068-777

**அமெரிக்க அதிஸ்ட விசா** இன்னும் 04 நாட்களில் நிறைவடைகின்றன

நீங்களும் அமெரிக்காவில்...

LOADING

0768226244 55000 இலவச விசாக்கள்



V2 TRAVELS 0768226236 (C-7523)



# விசா விண்ணப்பம்

**கனடா பிரான்ஸ் லண்டன்**

ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா, பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**கனடா பொன்சர் விசா 12 மாத்திரம் உள்ளது.**

**Work visa 10 மாத்திரம் உண்டு. இத்தாலி Work visa 14 மாத்திரம் உண்டு**

**நவம்பர் 20 ஆம் திகதியுடன் Visa வை கனடா தற்காலிகமாக இடைநிறுத்தவுள்ளது.** ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

வேலைவாய்ப்பு விசாக்கள் பெற்றுத்தரப்படும்.

**உங்களிடம் கனடா நாட்டிற்கான பொன்சர் இல்லையா?**
**கவலையை விடுங்கள் அதை எம்மிடமே பெற்றுக்கொள்ளலாம்.**


தொலைபேசியில் தகவல்கள் வழங்கப்படமாட்டாது.

**NSA Group of Company (Pvt) Ltd.**
**197, Main Street, Jaffna.** (17609)

**077 266 6429, 021 221 0599, 077 877 4838**

குறிப்பிட்ட பொன்சர் மாத்திரமே கையிருப்பில் உள்ளன.


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01.05.1999 | 29.10.2023 |

## உதயகுமார் உஷாந்தன்

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உதயகுமார் உஷாந்தன் அவர்கள் நேற்று *29.10.2023* அகால மரணமடைந்தார்.

*அன்னார் உதயகுமார் - அனுசா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் உஷாலினி, உஷானி ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2023) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (17610)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.
076 916 2852
077 007 1128
தகவல்: குடும்பத்தினர்

# கேரளாவில் குண்டுவெடிப்பு

(கேரளா)

கேரளாவில் நேற்று காலை 9 மணியளவில் கிறிஸ்தவ கூட்டரங்கில் 3 குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் ஒருவர் உயிரிழந்த நிலையில் 25 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கேரள பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருவதோடு இந்திய தேசிய பாதுகாப்பு படையும் கேரளா விரைந்துள்ளது.

இந்நிலையில், குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு பொறுப்பேற்று பொலிஸ் நிலையத்தில் ஒருவர் சரணடைந்துள்ளார்.

கண்ணூரில் மற்றொருவரை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் காவலில் எடுத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, சரணடைந்த டோமினிக் மார்ட்டின் என்பவரை ரகசிய இடத்தில் வைத்து தனிப்படை பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். (7)

## என்னைப்...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இரா.சம்பந்தன் விலக வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் விடுத்த கோரிக்கை தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் இரா.சம்பந்தன் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக இரா.சம்பந்தன் தம்முடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாகவும் அத்துடன் தம்மை நேரடியாக கொழும்பில் சந்திக்குமாறு அவர் கோரியிருப்பதாகவும் மாவை சேனாதிராஜா குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே இலங்கை தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

எனினும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வவுனியாவில் இந்த செயற்குழு கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், உடல்நலக் குறைவு காரணமாக அதில் இரா.சம்பந்தன் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் தெரிவித்த மாவை சேனாதிராஜா குறித்த செயற்குழுக் கூட்டத்தில் இரா.சம்பந்தனின் பதவி விலகல் குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படுமா என எழுப்பிய கேள்விக்கு பதில் அளிப்பதை தவிர்த்துக்கொண்டார். (ந-7)

## 37 மீனவர்...

சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை உத்தரவிட்டார்.

அத்தோடு ஊர்காவற்றுறை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரையும் நவம்பர் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

இந்நிலையில் இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய செயல்கள் தமிழ்நாட்டின் மீனவ சமுதாயத்தினரிடையே மன அழுத்தத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது எனவே கைது செய்யப்பட்ட 37 மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அமைச்சருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)


# பதவி வெற்றிடம்

**● தமிழ் ரைப்பிங் மற்றும் கணனி பக்க வடிவமைப்பு**

**அனுபவமுள்ளவர்களும் பயிலுநர்களும் (ஆண்கள்)**

**தகைமை : க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்**
**வயது - 24 இற்கு மேல்**

**076 097 3121**


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னர் கந்தையா



அன்னை மடியில் 02.02.1937 ஆண்டவன் அடியில் 09.11.2022

ஓர் ஆண்டு ஆனதண்ணா
எம்மைவிட்டு நீர் பிரிந்து
கண்ணின் மணியாய்
எமைக்காத்து வளர்த்த தெய்வமே
அண்ணா எமைவிட்டு நீர் சென்ற
இடம் ஆகாரம் இன்றி அனாதையாய்
உயிர் பிரியக் காரணமோ?
கருமனம் கொண்ட பாவிகள் உண்டு
உறங்க அனாதையாய் போனீர்கள்
தெய்வத்தின் தீர்ப்பு உண்டு நிச்சயம்.
ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (17611)

சகோதரி குடும்பத்தினர்
படித்த மகளிர் திட்டம், மிருசுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரம் அடையும் இஸ்ரேல்- ஹமாஸ் போர்

# இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பெரும் ஆபத்து

## சர்வதேச சந்தை வட்டாரங்கள் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**இஸ்ரேல்- பாலஸ்தீனப் போர் தீவிரமடைந்துள்ள நிலையில் ஐரோப்பாவில் இருந்து கப்பல்கள் மூலம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையும் ஏற்றுமதி செய்யும் பொருட்களின் விலையும் அதிகரித்து வருவதாக சர்வதேச சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

ஐரோப்பாவையும் கிழக்கையும் இணைக்கும் சூயஸ் கால்வாய் ஊடாக பயணிக்கும் கப்பல்களை இறக்குமதி செய்வதற்கும் ஏற்றுமதி செய்வதற்கும் சர்வதேச காப்புறுதி நிறுவனங்கள் விசேட இடர் கட்டணத்தை விதித்துள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சில காப்புறுதி நிறுவனங்கள் இடர் காப்புறுதி விகிதங்களை வெகுவாக அதிகரித்துள்ளதாக இலங்கையிலுள்ள முக்கிய சர்வதேச வர்த்தக நிறுவனம் ஒன்றின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,சூயஸ் கால்வாய் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில், சூயஸ் கால்வாய் ஊடாக செல்லும் கப்பல்களின் கட்டணம் 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள், எரிவாயு மற்றும் வாகனங்களுக்கு 15 சதவீத கட்டணமும், ஏனைய சரக்கு கப்பல்களுக்கு 5 சதவீத கட்டணமும் உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, காப்பீட்டு நிறுவனங்கள் இடர் கட்டணங்களை அதிகரித்துள்ளன.

இதற்கிடையில், போர் தீவிரமடையும் பட்சத்தில்,சூயஸ் கால்வாய் ஊடான போக்குவரத்து நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டு இஸ்ரேலிய வான்வெளி மூடப்படலாம் என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அந்நிலையில், ஆசிய நாடுகளில் இறக்குமதி பொருட்களின் விலை மேலும் உயரலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-6)

## சீனக் கப்பலுக்கான அனுமதி

# மேலும் நீடிப்பு



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள "ஷி யான் 6" மேலும் இரண்டு நாட்கள் துறை முகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பல் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாட்டிலிருந்து புறப்படவிருந்தது.

ஆனால் நாளை வரை கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 25ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பேராசிரியராகப் பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று முன்தினம் வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதி முகாமைத்தவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் நிதி முகாமைத்துவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (நி-6-33)

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் ஜனக்க



(கொழும்பு)

இலங்கை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியாக தாம் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்பது தொடர்பான நடவடிக்கைகளை தற்போது தாம் முன்னெடுத்து வருவதாக கொழும்பு ஊடகமொன்றுடனான நேர்காணலின் போது அவர் தெரிவித்தார்.

அத்துடன், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடுவதை யாராலும் தடுக்க முடியாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமென தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதி தேர்தலில் தாம் வேட்பாளராக களமிறங்குவது தொடர்பில் மதத்தலைவர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளதாக ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-6)

# அரச ஊழியர்களின் வேலை நேரங்களில் மாற்றம்

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஊழியர் ஒருவர் ஒரு நாளைக்கு உணவு இடைவேளை உட்பட மேலதிக நேர கொடுப்பனவுகள் இல்லாமல் 12 மணி நேரம் பணியாற்ற வேண்டும் என்ற புதிய வேலைவாய்ப்பு சட்டம் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது.

சட்ட மூலத்தை தயாரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் மனுஷ நாணயக்கார சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சட்டம் மூலமாக எட்டு மணி நேர வேலை இல்லாது போவதுடன் எட்டு மணி நேர வேலை நேரத்திற்கு பின் பணியாற்றும் ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இல்லாமால் போகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்தில் 45 மணி நேரம் பணிபுரியும் ஒரு ஊழியருக்கு 1 1/2 நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்று புதிய சட்டம் பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்கு குறைந்தது 100 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வேலைவாய்ப்பு சட்டம் ஊழியர் ஓய்வுபெறுவதற்கான குறைந்தபட்ச வயது 55 ஆக இருக்க வேண்டும் என்றும் 60 வயது வரை சேவையில் ஈடுபடுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட ஊழியர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தக் கூடாது என்றும் புதிய வேலைவாய்ப்புச் சட்டம் பரிந்துரைத்துள்ளது.

மேலும், புதிய வேலைவாய்ப்புச் சட்டம், பணியின் தன்மை மற்றும் பயன்பாட்டுத் தேவையைப் பொறுத்து, பணி வழங்குநர் மற்றும் பணியாளரின் விருப்பத்தின் அடிப்படையில்; சேவை ஒப்பந்தத்தின்படி, ஓய்வு பெறும் வயதை 55 முதல் 60 வயது வரை நீடிக்க அனுமதிக்கவும் பரிந்துரை செய்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஷமி, பும்ரா சூப்பர் இந்தியா சிக்ஸர்



## சோகம் ததும்பும் விழிகளில் இங்கிலாந்து



ஷமி, பும்ரா இரட்டை வேகங்கள் அசத்த அசராத இந்தியா 100 ஓட்டங்களால் நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை வீழ்த்தி ஆறாவது வெற்றியை (சிக்ஸர்) ஆனந்தமாய் பெற்றது.

இந்தியாவில் 13வது உலக கிண்ண தொடர் நடக்கிறது.

நேற்று லக்னோவில் நடந்த 29ஆவது லீக் போட்டியில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதின. இரு அணிகளிலும் மாற்றம் செய்யப்படவில்லை.

இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா அதிரடி ஆரம்பம் கொடுத்தார். டேவிட் வில்லி ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் விளாசினார். பின் இங்கிலாந்து 'வேகங்கள்' போட்டுத் தாக்க, இந்திய விக்கெட்டுகள் சரிந்தன. வோக்ஸ் பந்தில் சுப்மன் (9) போல்டானார். வில்லி பந்தை இறங்கி வந்து அடிக்க முற்பட்ட ஹோலி (0) ஆட்டமிழந்தார். ஸ்ரேயாஸ் (4) விரைவில் கிளம்ப, 12 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 40 ஓட்டங்கள் எடுத்து தவித்தது.

நான்காவது விக்கெட்டுக்கு ரோகித் - லோகேஷ் ராகுல் இணைந்து 91 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கையளித்தனர். ரோகித் அரைச்சதம் கடந்தார். லிவிங்ஸ்டன் ஓவரில் வரிசையாக இரண்டு பவுண்டரி அடித்த ராகுல், 39 ஓட்டங்களுடன் வெளியேறினார். தலைமைப் பதவிக்குரிய ஸ்தானத்தில் இருந்து ஆடிய ரோகித் (87 ஓட், 10 பவுண்டரி, 3 சிக்சர்), சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார். ரவிந்திர ஜடேஜா(8) ஏமாற்றினார். சூர்யகுமார் 49 ரன் விளாசினார். கடைசி கட்டத்தில் பும்ரா (16*) கைகொடுக்க, இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களை எடுத்தது. இங்கிலாந்து சார்பில் டேவிட் வில்லி அதிகபட்சமாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சுலப இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி, இந்திய பந்துவீச்சு படையிடம் 'சரண்டர்' ஆனது. பல முறை 'ஸ்டம்ப்ஸ்' பறந்தன. இங்கிலாந்தின் 'பாஸ் போல்' அதிரடி ஆட்டம் மீண்டும் எடுபடவில்லை. பும்ரா ஓவரில் மலான் (16), ஜோ ரூட் (0) ஆட்டமிழந்தனர். ஷமி 'வேகத்தில்' ஸ்டோக்ஸ் (0), பேர்ஸ்டோவ்(14) போல்டாகினர். குல்தீப் 'சுழலில்' அணித் தலைவர் பட்லர் (10) போல்டாக, அரங்கில் இருந்த இந்திய ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். லிவிங்ஸ்டன் 27 ஓட்டங்கள் எடுத்தார். இறுதிவரை துடுப்பாட்ட வீரர்களும் சோபிக்க தவற, இங்கிலாந்து அணி 34.5 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 5வது தோல்வியை பெற்றது. இதனால் இங்கிலாந்தின் அரையிறுதி கனவு அநேகமாக தகர்ந்துபோனது. இந்திய அணி தொடர்ந்து 6ஆவது (சிக்சர்) வெற்றியை பதிவு செய்து அசத்தியது. (7)

### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023
### புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 6 | 6 | 0 | 12 |
| 2 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 10 |
| 3 | நியூசிலாந்து | 6 | 4 | 2 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 |
| 5 | இலங்கை | 5 | 2 | 3 | 4 |
| 6 | பாகிஸ்தான் | 6 | 2 | 4 | 4 |
| 7 | ஆப்கானிஸ்தான் | 5 | 2 | 3 | 4 |
| 8 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 6 | 1 | 5 | 2 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 |









தென்னாபிரிக்க அணிதொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் ரக்பி உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது. நியூஸிலாந்துடனான இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணி 12:11 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. பிரான்ஸின் த பிரான்ஸ் விளையாட்டரங்கில் இந்த போட்டி நடைபெற்றது. தென்னாபிரிக்க அணி பெற்ற 12 புள்ளிகளில் 04 பெனால்ட்டிகளும் அடங்குகின்றன. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு நேற்று நாட்டிற்கு வருகை தந்துள்ளது.

இந்தக் குழுவில் உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் வருகை தந்துள்ளனர்.

உலக வங்கிக் குழு ஜனாதிபதி மற்றும் பலதரப்பு நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதுடன் இலங்கையில் உலக வங்கியின் உதவியின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் அவதானிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் குறித்த குழு அநுராதபுரத்திற்கு விஜயம் செய்யவுள்ளதுடன் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பிரசித்தி பெற்ற பாலமுருகன் சிலைக்கு நேற்று குடமுழுக்கு



(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையின் பிரசித்திபெற்ற தொன்மை வாய்ந்த முருகன் ஆலயங்களில் சிறப்பிடம் பெறும் தாந்தாமலை முருகன் ஆலயத்தை பிரதிபலிக்கும்முகமாக நிர்மானிக்கப்பட்ட கிழக்கிலங்கையின் உயரமான பாலமுருகன் சிலை நேற்று முற்பகல் 10 மணியளவில் திருக்குடமுழுக்கு பெருவிழா இடம்பெற்றது.

தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சுதானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்ற திருக்குடமுழுக்கு பெரு விழாவில் சிவஸ்ரீ சாம்பசிவம் சிவாச்சாரியார் உள்ளிட்ட பெருமளவான பக்த அடியார்கள், சிலை நிர்மாண குழுவினர் மற்றும் ஆலய அறங்காவலர் சபையினர் என அதிகளவானோர் கலந்துகொண்டு திருக்குடமுழுக்கு பெருவிழாவினை சிறப்பித்திருந்தனர்.

இதன்போது ஆலய நிர்மாண பணிக்காக கிடைக்கப்பெற்ற நிதியில் இருந்து வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் சிலருக்கு கற்றல் உபகரண தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)




# இராசிபலன்

30.10.2023
ஐப்பசி 13, திங்கட்கிழமை
துதியை பின்னிரவு 12.26 மணிவரை

பரணி முற்பகல் 6.42 மணிவரை
சுபநேரம் -12.03-1.33 மணிவரை
இராகுகாலம்-7.33-9.03 மணிவரை

சந்திராஷ்டமம்-சித்திரை,
கார்த்திகை விரதம்.

வளவன்

**மேஷம்:** துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கடகம்:** பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்டகரமான நாள், கௌரவமான நாள்.

**துலாம்:** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** தாய்வழி ஆதரவு பெருகும், மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி:** பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வருங்காலத்தைப் பற்றிய சிந்தனை மேலோங்கும், உடல் நலன் சீராகும், சுவாரஸ்யமான நாள்.

**மீனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

எஜமானுக்கு கடன் ஏறிவிட்டால் வேலைக்காரர்கள் திருடர்களாவார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்தியாவிடையே விரிசலை ஏற்படுத்தும் சீனா



(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே சீனா செயற்பட்டு வருவதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.


சீன ஆய்வுக் கப்பலான Shi Yan 6 இன் வருகை குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களையும் இந்தியாவையும் எதிரியாகவும் சீனாவை நண்பனாகவும் கொண்டு செயற்படுகிறது.

ஆசியாவில் சீனா தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ள இலங்கையில் ஆதிக்கத்தை அதிகரித்துக் கொண்டு இருப்பதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

சீனாவின் செயற்பாடுகளை இந்தியா தெளிவாக புரிந்து கொள்ளாவிடின் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விடும் என தெரிவித்தார். (நி-6)

# கஞ்சாவுடன் இருவர் வட்டுக்கோட்டையில் கைது



(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 104 கிலோ எடையுடைய கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை வீதி யூடாக முச்சக்கர வண்டியில் கஞ்சாவினை எடுத்துச் செல்லும் போதுகடற்படையினரால்இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (நி-6-104-33)

# தூங்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியில் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் நெசவு ஒழுங்கை உடுப்பிட்டியை சேர்ந்த கிருஷ்ணகுமார் கிருசாந்தன் (வயது 27) என்பவராவார்.


கடந்த வியாழக்கிழமை இரவு தூக்கில் தொங்கிய நிலையில் வீட்டாரால் மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கடந்த வெள்ளிக்கிழமை சடலம் கொண்டு வரப்பட்டதையடுத்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா குறித்த மரணம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டார். (நி-6-60)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் திருப்பலி கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# குறிகாட்டுவான் இறங்குதுறை பிரச்சினைகளை ஆராய்ந்த அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று அங்குள்ள பிரச்சனைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு பயணத்தை மேற்கொள்ளும் படகுகளுக்கு இறங்கு துறையில் இடங்கள் ஒதுக்கப்படாததால், படகுகளை கரை சேர்ப்பது மற்றும், தரித்து நின்று பயணிகளை ஏற்றுவதிலும் இடர்களை எதிர்கொண்டு வருவதாக படகு உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. விடயம் தொடர்பில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அந்நிலையில் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு நேரில் சென்ற அமைச்சர் நெடுந்தீவு மற்றும் நயினாதீவு இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள், கடற்படையினர் மற்றும் துறைசார் அதிகாரிகளை குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு நேரில் அழைத்து எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் படகுகளுக்கு இறங்குதுறையில் இடம் ஒதுக்குதல், தரித்து நிற்கும் நேரம், சேவையில் ஈடுபடுவதற்கான நேர அட்டவணை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (நி-6 -33-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 250 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 320 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 160 | 150 |
| கோவா | 200 | 150 | 200 | 300 |
| கரட் | 350 | 300 | 380 | 400 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 180 | 160 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 270 | 300 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 300 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 320 | 400 |
| லீக்ஸ் | 200 | 160 | 240 | 300 |
| பீற்றூட் | 140 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 350 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 280 | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-90 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | -- | 350 | -- | 480 |
| முள்ளங்கி | 100 | 120 | -- | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | -- | 200 |




இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முன்னேற்பாடாக சர்வதேச சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பருத்தித்துறை முதல் டிக்வெல்ல வரையில் விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டப் பயணம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. (படம்: மகாலிங்கம்)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நவம்பர் 2 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.13 மணிமுதல் 10.25 மணி வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவில் சிக்கியுள்ள இலங்கையர்கள்

(காசா)

இஸ்ரேல் காசா மீதான தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ள நிலையில் முழுமையான போர் குறித்த அச்சங்களிற்கு மத்தியில் மூன்று குடும்பங்களை சேர்ந்த 17 இலங்கையர்கள் தொடர்ந்து காசா பள்ளத்தாக்கில் சிக்குண்டுள்ளனர்.

இலங்கையர்கள் தற்போது தென்காசாவில் தஞ்சமடைந்துள்ளனர். ஆனால் எகிப்திற்கு செல்லும் ரஃபா எல்லை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ள தால் அவர்களை வெளியேற்ற முடியாத நிலையில் இலங்கை அதிகாரிகள் உள்ளனர்.

எகிப்திற்கு செல்வதற்கு இதுவே ஒரே வழி. மேலும் இஸ்ரேலிய படையினரின் கட் டுப்பாட்டின் கீழ் இல்லாத ஒரேவழியாக இது காணப்ப டுகின்றது.



மூன்று குடும்பங்களை சேர்ந்த 17 இலங்கையர்களும் தற்போது பாதுகாப்பாக உள்ளனர்.

எனினும் மோசமான நிலையில் வாழ்கின்றனர் என பாலஸ்தீனத்திற்கான இலங்கை தூதுவர் நவலகே பெனெட் குரே தெரிவித்துள்ளார்.

நாங்கள் அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# மட்டக்களப்பு தேரர் மீதான முறைப்பாடுகள் குறித்து விசாரணை

## முன்னெடுக்கப்படும் என்கிறார் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)



நாட்டில் சட்டம், ஒழுங்கை நடைமுறைபடுத்துவதற்கும் அமைதியைப் பேணிக்காப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அம்பிட்டிய சுமணரத்ன தேரர் விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பொலிஸார் விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

ஆகவே, வீணான சந்தேகங்களை வெளியிட வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை" என அவர் தெரிவித்தார். (நி-6)

# போதைக்கு அடிமையாகி சொந்தவீட்டையே எரித்த இளைஞன்







(மட்டக்களப்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதியகாத்தான் குடியில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலையில் இளைஞர் ஒருவர் சொந்த வீட்டை தானே தீ வைத்து எரித்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக 27 வயது இளைஞர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் உத்தரவிட்டார்.

தீ வைக்கப்பட்ட வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், வீட்டிலிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.எம்.ஏ.றஹீம் தெரிவித்தார்.

போதைவஸ்து பாவனையின் எதிரொலியே இச்சம்பவம் இடம்பெற்ற காரணம் என தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, கைதானவர் ஐஸ் மற்றும் போதைவஸ்துக்கு அடிமையானவர் என இளைஞரின் தந்தை தெரிவித்துள்ளார். இது குறித்து காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# புதிய அரசியல் பயணத்திற்கு தயார்

## தயாசிறி அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் பயணத்தை ஆரம்பிக்க தயார் என பாரா ளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு புதிய அரசியல் இயக்கம் தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊட கவியலாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதிலளிக் கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் இன்னும் சிறிலங்கா சுதந் திரக் கட்சியிலேயே இருக் கின்றேன்.

அனைத்துக் கட்சிகளும் தம்முடன் இணையுமாறு கோரின. மற்ற கட்சி



களில் சேர[illegible] தயாராக இல்லை எனவும் அவர் [illegible]. (நி-6)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
உபஅலுவலகம், கோப்பாய்
ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 14, டச்சு வீதியில், 17 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம், சொந்தக்காரரர் உ.கோ : நடராசா நவரத்தினம் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை யாழ்ப்பாணம், தற்போது இல 242/1A, Mitchell Street, St. Mary's 2760 NSW, Australia என்ற முகவரியைச் சேர்ந்த நவரட்ணம் ( கடவுச்சீட்டு இல PA 2378789 ) என்பவர் தனது அற்றோனித்தத்துவக்காரர். இல 132/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியினைச் சேர்ந்த சிவகுமாரன் சசிதரன் (தேசிய அடையாள அட்டை இல-640481218V) மூலம் பிரசித்த நொத்தாரிசு கணநாதபிள்ளை நிஷாந்தன் முகதாவில் 04.01.2022 ஆம் திகதி 238 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் 89/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை படிகைவேந்தனிற்கு ஒப்படைத்துள்ளார்.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டதாயுறுதியான பிரசித்த நொத்தாரிசு தம்பித்துரை சண்முகராஜாமுகதாவில் 1989.03.16 ஆம் திகதிய 3105 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வீரப்பன் சிவநேசனால் தனது நீண்டகால சொந்தமும் ஆட்சியுமாக இருந்ததென வெளிப்படுத்தப்பட்டுள்ள தோடு இவ் அத்தாட்சிப்படுத்திய உறுதி சம்பந்தமான இணைப்பிரதி குறித்த நொத்தாரிசினால் காணிப் பதிவகத்தில் ஒப்படைக்கப்படவில்லை என காணிப்பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதன அட்டவணை

வடமாகாணம்,யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப்பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய் தெற்கு இறையும் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையும் கிராமசேவகர் பிரிவு J/259 "கொடிதூக்கி" நிலப்பரப்பு 08, குளி 00 உம் கிணறும் எனக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாதனத்திற்கான எல்லைகள்

கிழக்கு- வாய்க்கால்

வடக்கு-நாகையா நாகேஸ்வரனின் ஆதனம்

மேற்கு- டச்சு வீதி

தெற்கு- சபாபதி கோமதியின் ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை சுந்தரம்பிள்ளை படிகைவேந்தன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரம்பிள்ளை படிகைவேந்தன் என்னும் பெயரிற்கு, பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
(7584)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



# உலகம் தனது மௌனத்தைக் கலைக்க இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்?
## ஸ்கொட்லாந்து பிரதமர் கேள்வி

(ஸ்கொட்லாந்து)
இந்த உலகம் தன் மௌனத்தைக் கலைக்க இன்னும் எத்தனை குழந்தைகள் பலியாக வேண்டும்? என்று ஸ்கொட்லாந்து பிரதமர் ஹம்ஸா யூசஃப் கேள்வியெழுப்பியுள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் முரண்பாடுகள் தொடர்பில் தனது அதிகாரபூர்வ சமூக வலைத்தளத்தில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்."காசா மிக மோசமான குண்டு வீச்சு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு சேவை முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது." என தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் 22 நாட்களை கடந்துள்ளது.

இந்த தாக்குதலால் காசாவில் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. போரில் பலியானவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆவர்.(நி-6)

# இஸ்ரேலின் நடவடிக்கைகளால் பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியேற்படலாம்




(டெஹ்ரான்)
இஸ்ரேலின் நடவ டிக்கைகள் காரணமாக அனைவரும் பதில் நடவ டிக்கைகளை எடுக்க வேண்டிய நிலையேற் படலாம் என ஈரான் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு சென்றுவிட்டன என இப் ராஹிம் ரைசி தெரிவித்துள்ளார்.

ஈரான் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என அமெரிக்கா வேண்டு கோள் விடுக்கின்றது ஆனால் அவர்கள் இஸ்ரே லிற்கு பரந்துபட்ட ஆத ரவை வழங்குகின்றனர் என் தெரி வித்துள்ள ஈரான் ஜனாதிபதி மத்திய கிழ க்கில் உள்ள ஈரான் சார்பு அமைப்புகளிற்கு அமெ ரிக்கா செய்திகளை அனுப்பியது ஆனால் போர்க்களத்தில் சரியானபதிலை பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# துருக்கியிலிருந்து தமது தூதுவரை வெளியேற இஸ்ரேல் உத்தரவு

(ஜெருசலேம்)
காசா மீது இஸ்ரேல் நடத்தும் வான் தாக்குதல்களை துருக்கிய ஜனாதிபதி எர்டோகன் கடுமையாக கண்டித்துள்ள நிலையில் அந்த நாட்டிலுள்ள தமது நாட்டு தூதுவரை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் எலிகோஹன் தனது நாட்டு தூதுவர்களுக்கு வெளியேறும் உத்தரவை பிறப்பித்துள்ளதாக டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்..

இதேவேளை நேற்றும் காசாவில் இஸ்ரேல் விமானப்படை நடத்தும் தாக்குதல்களை துருக்கிய ஜனாதிபதி "படுகொலை" என்று வர்ணித்துள்ளார். (நி-6)



# அவுஸ்திரேலியாவில் இஸ்ரேலுக்கு ஆதரவாக பல இடங்களில் நடைபெற்ற பேரணி





(கன்பெரா)
சிட்னியிலும் மெல்பேர்னிலும் பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலிற்கும் ஆதரவாக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

சிட்னியில் இஸ்ரேலிற்கு ஆதரவை வெளிப்படுத்துவதற்காக யூத சமூகத்தினர் பேரணியொன்றை முன்னெடுத்தனர்.

ஹமாசினால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டவர்கள் குறித்து கவனத்தை ஈர்ப்பதே தங்களின் நோக்கம் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களை வீட்டிற்கு கொண்டுவாருங்கள் என்ற இஸ்ரேல் சார்பு ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள் சிறுவர்களும் பெண்களும் ஹமாசினால் பிடிக்கப்பட்டுள்ளதை காண்பிப்பதற்காக காலணிகள், பிராம்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தியுள்ளனர்.

பகுதிவரை பேரணியாக சென்றவர்கள் அங்கு பாடல்கள் பிரார்த்தனைகளுடன் தங்கள் ஆர்ப்பாட்டங்களை நிறைவு செய்தனர்.

இதேவேளை மெல்பேர்னின் மாநில நூலகத்திற்கு வெளியே பாலஸ்தீன சார்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

சுதந்திர பாலஸ்தீனம் என கோசமிட்டவாறு பாலஸ்தீன கொடியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உடனடியுத்த நிறுத்தத்திற்கு அழைப்புவிடுத்துள்ளனர். (நி-6)

# ஹமா...
# களமி...
## இரத்த ஆறு...

(காசா)
ஹமாஸ் தீவிரவா...
அஸ்திரம் தான் பிசா...
களமிறக்கியது இஸ்...
இரத்த ஆறு ஓடும் என...

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி திடீர் தாக்குதலை நடத்தி ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை கொன்றும் 200 ற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாகவும் பிடித்துச் சென்ற ஹமாஸ் அமைப்பு அதற்கான விலையை தற்போது காசாவில் செலுத்திக் கொண்டிருக்கிறது.

ஹமாஸின் தாக்குதலால் சீற்றமடை... மீது பயா... தாக்குத... றது.இத... கும் மே... கொல்ல... எண்ணி... காயமடை... டும் வரு...
காசா ... மக்களுக்...

# உருக்கு சுரங்கத்தில் தீ...
# 25 இற்கு மேற்பட்டோ...



(கஜகஸ்தான்)
கஜகஸ்தானில் உள்ள மிகப்பெரிய உருக்கு சுரங்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி ஏறக்குறைய 25 பேர் பலியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கரகண்டாவில் உள்ள தொழிற்சாலையில் இடம்பெற்ற இந்த தீவிபத்தில் சிக்கி மேலும் 18 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்ட போது சுர... 252 ப... இருந்தத... ர்களில் ... காணவில்... அதன் உரி... ஆர்செலர்... ர்டாவ் தொ...
தீ விப... ணம் அறி... யில், சம்... மேலதிக... களை பெ... கொண்டு... அந்நாட்டு... தெரிவித்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மாஸை கூண்டோடு ஒழிக்க ...மிறங்கியது 'பிசாசு' படை

## ...ஆறு ஓடுமென எச்சரிக்கை

**...தீவிரவாதிகளை ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அனுப்பும் கடைசி ...ன் பிசாசு படை. அந்தப் படையுடன் மேலும் 6 படைகளை ...து இஸ்ரேல். இந்தப் படைகள் அங்கு சென்றிருப்பதால் ...ஓடும் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

சீற்றமடைந்த இஸ்ரேல் காசா மீது பயங்கரமான விமான தாக்குதலை நடத்திவருகிறது. இதனால் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டும் பெரும் எண்ணிக்கையிலானோர் காயமடைந்தும் அவதிப்பட்டும் வருகின்றனர்.

காசா இப்பொழுது அம் மக்களுக்கு மரணப்பொறியாக மாறிக்கிடக்கிறது.

இந்த நிலையில் இஸ்ரேல் தனது தரைவழி தாக்குதலை ஆரம்பித்துள்ளது. ஹமாஸ் அமைப்பை கூண்டோடு ஒழிக்கும் வகையில் இந்த தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுரைத்துள்ளார்.

இந்த தாக்குதல்களுக்காக உலகிலேயே மிகவும் ஆபத்தான படைப்பிரிவாக கருதப்படும் இஸ்ரேலின் "பிசாசுப் படை" காசாவில் தரையிறங்கி இருக்கிறது. அவர்களுடன் சேர்த்து புதிதாக 6 பயங்கர படைப்பிரிவுகளை இஸ்ரேல் காசாவுக்கு அனுப்பி வைத்துள்ளது. இதுதான், ஹமாஸ் தீவிரவாதிகளை கூண்டோடு ஒழித்துக்கட்ட இஸ்ரேல் அனுப்பும் கடைசி அஸ்திரம் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரெஃபயிம் என்றால் ஹெப்ரு மொழியில் பிசாசு என்று அர்த்தம். 2019 இல் உருவாக்கப்பட்ட இந்தப் படைப்பிரிவில் தரைப்படை, விமானப்படை, கடற்படை, ஆயுதப்படை, தற்காப்புக் கலை, சைபர் தாக்குதல் படை ஆகிய துறைகளில் மிகவும் நிபுணத்துவம் பெற்ற வீரர்கள் இருப்பார்கள். ஒரே நேரத்தில் பல பரிமாண தாக்குதல்களை இந்த பிசாசுப்படை நடத்தும்.

அடுத்தது டுவ்டெவான் படை. முழுக்க முழுக்க தீவிரவாதிகளை அழிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட படைப்பிரிவு ஆகும். இந்தப் படையில் உள்ள வீரர்கள், எந்த நாட்டிற்கு வேண்டுமானாலும் சென்று அங்கு பதுங்கி இருக்கும் தீவிரவாதிகளை அழிக்கவும், தேவைப்பட்டால் அவர்களை உயிருடன் இஸ்ரேலுக்கு கடத்தி வரவும் செய்யும் திறன் பெற்றவர்கள்.

2015 இல் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திவிட்டு பாலஸ்தீனத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற தீவிரவாத தளபதியை, அங்கேயே சென்று தட்டி தூக்கியவர்கள் இவர்கள்.

இதேபோல, தாக்குதல் மற்றும் மீட்புப் பணியில் தலைசிறந்த யூனிட் 669, ஆகாய மார்க்கமாக தாக்குதல் நடத்தும் ஷயெடெட் 13, பொறியியல் படைப்பிரிவான யஹலோம், எதிரிகள் மீது கொடூர தாக்குதல் நடத்தும் பயிற்சி பெற்ற இராணுவ நாய்களை வைத்திருக்கும் ஒகெட்ஸ் படைப்பிரிவு ஆகிய படைப்பிரிவுகள் காசாவில் களமிறங்கி இருக்கின்றன.

இந்த 6 படைப்பிரிவுகள் சென்றிருப்பதால் காசாவில் இரத்த ஆறு ஓடும் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

## ...த்தில் தீ விபத்து ...ற்பட்டோர் பலி



...போது சுரங்கத்திற்குள் 252 பணியாளர்கள் இருந்ததாகவும், அவர்களில் 23 பேரை காணவில்லை என்றும் அதன் உரிமையாளரான ஆர்செலர் மிட்டல் டெமிர்டாவ் தெரிவித்தார்.

தீ விபத்திற்கான காரணம் அறியப்படாத நிலையில், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.(நி-6)


## எகிப்தில் கார்கள் அடுத்தடுத்து மோதி பயங்கர விபத்து: 35 பேர் பரிதாப பலி

(கெய்ரோ)

எகிப்தில் உள்ள கெய்ரோ பகுதியில் சென்று கொண்டிருந்த கார்கள் அடுத்தடுத்து மோதி பயங்கர விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், இந்த விபத்தில் 50 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



எகிப்தில் விபத்துகள் பெரும்பாலும் வேகம், மோசமான சாலைகள் அல்லது போக்குவரத்து சட்டங்களை சரியாக செயற்படுத்தாததால் ஏற்படுவதாக கூறப்படுகிறது. (நி-6)

## இஸ்ரேலை போர் குற்றவாளியாக அறிவிப்போம் துருக்கி ஜனாதிபதி எர்டோகன் வலியுறுத்து



(இஸ்தான்புல்)

இஸ்ரேலை போர்க் குற்றவாளியாக அறிவிப்போம், அதற்கான வேலைகளை தொடர்ந்து செய்து வருகிறோம் என துருக்கி ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்துள்ளார்.

துருக்கியின் இஸ்தான் புல் நகரில் உள்ள அட்ட துர்க் விமான நிலையத்தில் சுமார் 1.5 மில்லியன் மக்கள் கூடி பாலஸ்தீனத்திற்கு ஆதரவு வழங்கும் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

"நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? நீங்கள் ஒரு ஆக்கிரமிப்பாளர்கள், மேற்கத்திய நாடுகள் உங்களுக்கு கடன்பட்டு இருக்கலாம், ஆனால் துருக்கி உங்களுக்கு கடன் பட்டிருக்கவில்லை. மேற்கத்திய நாடுகளே. உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்! சிலுவைக்கும், பிறை நிலாவுக்கு இந்த சண்டை வேண்டுமா என்று?

லிபியாவில், கராபாக்கில் எப்படி இருந்தோமோ அப்படியே மத்திய கிழக்கிலும் நாங்கள் இருப்போம்." என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீரிழிவு நோயும் பத்தியாபத்தியமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சித்த வைத்திய சிகிச்சையை பொறுத்தமட்டில் மருந்து, ஆகாரம் அதாவது பத்திய உணவுகள், செய்கைகள் அதாவது உடற்பயிற்சி ஆகிய மூன்றும் முக்கிய இடம்பெறுகின்றன. பெரும்பாலான நோய்களுக்குக் முக்கிய காரணம் ஆகாரங்களின் மாறுபாடுகளே ஆகும். இதனுள் நீரிழிவும் அடங்கும். அதனால் தான் திருவள்ளுவர் கூட மருந்து எனும் அதிகாரத்தில் கூறியுள்ள 10 குறள்களில் 6 உணவு பற்றியதாகும்.


திருக்குறளில் அந்த அதிகாரத்திற்கு மருந்து என்று பெயரிடப்பட்டது கூர்ந்து நோக்கத்தக்கது. அதில் உணவு பற்றியும் அதன் ஒழுங்கீனத்தால் ஏற்படும் பாதிப்புப் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார். "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" எனும் குறளில் உணவே மருந்து எனும் உண்மையை உணர்த்தியுள்ளார்.

எமது நாட்டில் நீரிழிவு போன்ற நோயால் பாதிப்படைவோரின் தொகை கணிசமான அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சமூக அமைப்பில் நீரிழிவு போன்ற நோய்கள் அவர்களின் பொருளாதார தன்மையையொட்டியும் வாழ்வியல் நடைமுறை காரணமாகவும் அடிக்கடி சம்பவிக்கின்றன.

குறிப்பாக மேற்குலக நாட்டவரின் உணவுப் பழக்கம், உடல் உழைப்பற்ற வாழ்க்கை, வசதி கூடியதான நவீன வாழ்வியல் முறை, அமைதியற்ற வாழிவியல்முறை முதலியன நீரிழிவு போன்ற நோய்களின் வெளிப்பாட்டிற்கு கட்டியம் கூறுவனவாக அமைந்து உள்ளன. நாகரீகம் அடைந்து வரும் மக்களிடையே நீரிழிவு போன்ற நோய்கள் சுத்திகரிக்கப்பட்ட (Refined products) Carbohydrates ஆன வெண்பாண், வெண்சீனி முதலானவற்றை அதிகளவு உண்பதால் ஏற்படுகிறது என்பதை ஆய்வுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

முக்கியமாக சித்த மருத்துவத்தில் நோயாளிகளின் பத்தியத்தில் உப்பு, புளி நீக்கப்பட வேண்டும் எனவும் அல்லது வேறு முறைகளாக உபயோகிக்கப்படவும் வலியுறுத்தப்படுகிறது.

உப்பு, புளி நீக்கப்படுதல் அல்லது குறைவாக சேர்க்கப்படுவதால் உணவின் சுவை குறைகின்றது. அதன் விளைவாக நோயாளி அநாவசியமாக அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது என்பது தவிர்க்கப்படுகிறது. இந் நோய் நிலைமையில் மிதமான சாப்பாடே அவசியமாகினும் அளவான பத்திய




உணவானது மனோ விகாரங்கள் ஏற்படாமலும் தடுக்கிறது. உதாரணமாக உப்பில்லாப் பத்தியமானது உணவின் விருப்பத்தைக் குறைக்கின்றது. உடலின் குறிப்பிட்ட பாகங்களில் நீர் அல்லது திரவத் தேக்கம் ஏற்படுவதை தடுக்கின்றது. மன உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்தி வைத்திருக்க உதவுகின்றது.

நீரிழிவு நோயாளிகளின் பத்திய உணவுகளில் தானிய, சிறுதானிய உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். தற்காலத்தில் முழுத் தானியங்களினால் ஆன உணவுப் பாவனை அருகிப் போகின்றது. உதாரணமாக சோளம், இறுங்கு, வரகு, தினை, குரக்கன், கடலை, கௌபி, பாசிப்பயறு முதலானவை.

நீரிழிவு நோயாளிகள் தமது நாளாந்த உணவில் நார்ப்பாங்கான கடினமான உணவுக் கூறுகள் சேர்த்தல் அவசியமாகும். இதில் மிக மென்மையான உறிஞ்சும் தன்மையுடைய நார்களைக் கொண்ட தானியத்தின் வெளியுறையாக மூடியுள்ள தவிட்டுப் பகுதிகளுடன் சேர்த்துப் பயன்படுத்தல் வேண்டும். அத்துடன் கரடுமுரடான நார்களைக் கொண்ட உணவுப் பொருட்களான காய்கறிகள், கீரைகள், ஒடியல் முதலானவை இன்றியமையாததாகக் கொள்ளப்படுகின்றது. இக்கூறுகள் சரிவரக் கிடைக்குமானால் அதிகூடியளவு கலோரிகள் உள்ளெடுப்பதைத் தடுக்கலாம் அல்லது கட்டுப்படுத்தலாம். இதனால் நீரிழிவு போன்ற நோய்கள் வராமல் தடுக்கலாம்.

திருக்குறள் 943 இல்

**"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்குமாறு."**

பொருள் - முண்புண்டது அற்றபின் உண்பதையும் அளவாக உண்ண வேண்டும். இதுவே மானிட யாக்கையை நெடுங்காலத்திற்கு காப்பாற்றும் வழியாகும்.

பசி எனப்படுவது அற்றோனா கொடுநோய் நோய் எனப்படுவது உண்மையில் பெருந்தீனி உண்பது தானே.

உலகிலேயே முதல் வைத்தியர் திருவள்ளுவர் எனப் பல கருத்துப் பதிவுகள் உள்ளன. மருந்தெனும் அதிகாரத்தில் உள்ள 10 குறள்களில் 7 குறள்கள் உணவைப் பற்றியே கூறுகின்றன.

**"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளி முதலா எண்ணிய மூன்று."**

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போற்றி உணின்."**

**"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்குமாறு."**

**"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து,"**

**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணில்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு."**

**"இழிவறிந்து உண்பான்கண் இன்பம் போல்**
**கழிபே ரிரையான் கண் நோய்."**

**"தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயளவின் றிப் படும்."**

பசி ஏற்படாமல் தடுப்பதற்கும் பசி காரணமாக அதிகமாக உண்ணாமல் தவிர்ப்பதற்குமாக சரியான நேரங்களில் உண்பது முக்கியமாகும். சாப்பிடப் போகும் போது முழு உணவையும் ஆரம்பத்திலேயே உங்கள் கோப்பையில் பரிமாறிக் கொண்ட பின்னர் தான் உண்ணத் தொடங்க வேண்டும். இடையிடையே போட்டுக் கொண்டால் மேலதிகமாக உண்ண நேரிடும். கோப்பையின் அளவு சிறிதாக இருப்பதும் விரும்பத் தக்கது.

உண்ணும் போது ஆரம்பத்திலேயே காய்கறிகளையும் கீரை வகைகளையும் உண்ண வேண்டும். பின் தானிய வகைகளையும் மாப்பொருளையும் உட்கொண்டால் தேவைக்கு மேலதிகமாக உண்ண நேரிடாது. உணவு உண்ணும் போது உங்கள் முழுக் கவனமும் அதிலேயே இருக்க வேண்டும். உங்கள் கவனம் சிதறினால் அளவுக்கு அதிகமாக உண்ண வேண்டும். உணவு உண்ணும் போது ஒரு தடவை மட்டும் சாப்பிடுங்கள். மீண்டும் மீண்டும் உண்பதைத் தவிருங்கள்.

பொதுவாக சித்த மருத்துவத்தில் பத்திய உணவுகளில் பசுப்பாலின் பாவனையும் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் ஆடை நீக்கிய பசுப்பால் நீரிழிவு நோயாளிக்கு உகந்தது எனவும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆடை நீக்கிய பாலின் பொதுக்குணம்**

**ஆடை யெடுக்கும் பாலக்கினி மந்தப்படுமே**
**வாடை நல்லாய் சீரணமாம் வாதமறுங் - கோடையிடி**
**போலு மெழுந்த பித்தம் போகுமே சுவரியசீர்**
**வேலனைய கண்ணாய் விதி.**

பொருள் - ஆடை நீக்கிய பாலால் வாத, பித்த, கப தோடங்கள் நீங்கும்.

நேரத்திற்கு உணவு உண்பது பற்றியும் அதாவது நீரிழிவு நோயாளிகள் உரிய நேரத்தில் உணவு அருந்தாது உடல் களைப்புடன் வேலைகள் செய்ய அல்லது அப்பியாசம் செய்ய நேரிடில் மயக்கம் அடைய சாத்தியமாகும். எனவே காலம் தாழ்த்தாது உரிய உணவுகளை வழமை போல எடுத்தல் மிகவும் அவசியமாகும்.

(அடுத்த வாரம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டம் நியாயமானது- சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

இலங்கையில் பல்வேறு தொழிற் சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டம் நியாயமானது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெறும் தொழிற்சங்க போராட்டங்கள் அடக்கப்படுகின்றமை தொடர்பில் ஊடகவியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது இலங்கையில் நடைபெறும் தொழிற்சங்க போராட்டங்கள் உண்மையானது. அவர்கள் மிகவும் வறுமை நிலையில் வாடுகின்றார்கள்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு நேரம் அல்லது ஒரு நேரம் மட்டும் உணவை உண்டு வாழும் மக்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த நாடு பொருளாதார ரீதியாக கடுமையாக நலிவுற்று இருக்கின்றது. அனைத்து பொருட்களின் விலைகளையும் அதிகரிக்கும் அரசாங்கம் உத்தியோகத்தர்களின் சம்பள உயர்வையோ தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த வில்லை மற்றும் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்த நிலையில் தெருவிலே நிற்கின்றனர் எனத் தெரிவித்தார். (நி-6)



கிளிநொச்சி மாவட்ட தருமபுரம் பகுதியில் அமைந்துள்ள இலக்கம் 1 அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 65 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டிய வைரவிழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (படம்- தேவானந்தன்)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்த மு.சக்கரவண்டி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வேகமாக பயணித்த முச்சக்கரவண்டியொன்று வீதியை விட்டு விலகி கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்று மதியம் ஊர் காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியே வேகக் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்நது விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டியில் சாரதி உட்பட ஐவர் பயணித்த நிலையில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-33)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய மூன்று டிப்பர்கள் பறிமுதல்



(தருமபுரம்)


சட்டவிரோதமாக மணல் ஏற்றி பயணித்த மூன்று டிப்பர் வாகனங்களுடன் சாரதிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்று பகுதியில் தடை செய்யப்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணித்த மூன்று டிப்பர் வாகனங்கள் தொடர்பில் தர்மபுர பொலிஸாருக்கு நேற்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த கைது முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மூவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (நி-6-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2953

விதுரன்





நந்தன்




தவனேஷ்




நர்மதா




யாழினி




நிறைஞ்சனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 322





மேன்மாடத்திலிருந்து பார்த்தால் தஞ்சை நகரின் காட்சி முழுவதும் தெரியும். துர்க்கை ஆலயத்தைக் கூடப் பார்த்தாலும் பார்க்கலாம் - இவ்விதம் எண்ணிப் படுக்கையை விட்டு எழுந்து சென்றாள். அந்த அரண்மனைக்கு வானதி புதியவள்தான். ஆயினும் மேன்மாட நிலா முற்றத்தைக் கண்டுபிடிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமாயிராது. நீள நெடுகப் பாதைகளும், இருபுறமும் தூண்களும், தூங்கா விளக்குகளும் இருக்கும் போது என்ன கஷ்டம்?

பாதைகள் சுற்றிச் சுற்றிச் சென்று கொண்டிருந்தன. முன்னிரவில் ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்த விளக்குகள் பல அணைந்து விட்டன. சில புகை சூழ்ந்து மங்கலான ஒளி தந்தன. ஆங்காங்கு பாதை முடுக்குகளில் தாதிமார்கள் படுத்தும் சாய்ந்தும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எழுப்பி வழி கேட்க இஷ்டப்படாமல் வானதி மேலும் சென்று கொண்டிருந்தாள். அந்த அரண்மனைப் பாதைகளுக்கு ஒரு முடிவேயில்லை போலத் தோன்றியது.

திடீரென்று ஒரு குரல் கேட்டது. அது தீனமான துயரக் குரலாகத் தொனித்தது. வானதிக்கு ரோமாஞ்சனம் உண்டாயிற்றுஉடம்பு நடுங்கியது. அவளுடைய கால்கள் நின்ற இடத்திலேயே நின்றன.

மறுபடியும் அந்த அபயக் குரல்:

"என்னைக் காப்பாற்றுவார் யாருமில்லையா?"

ஆகா! இது சக்கரவர்த்தியின் குரல் போல் அல்லவா இருக்கிறது! என்ன ஆபத்தோ தெரியவில்லையே! உடல் நோயின் கோளாறா? அல்லது வேறு ஏதாவது இருக்குமோ? சக்கரவர்த்தினி முதலிய மூத்த பெண்டிர் அனைவரும் கோயிலுக்குச் சென்று விட்டார்களே? சக்கரவர்த்திக்குப் பக்கத்தில் யாரும் இல்லாமலா இருப்பார்கள்? ஆயினும் போய்ப் பார்க்கலாம்.

நடுங்கிய கால்களை மெதுவாக எடுத்து வைத்து வானதி மேலும் சில அடி நடந்தாள். குரல் கீழேயிருந்து வருவதாகத் தோன்றியது. அந்த இடத்தில் பாதையும் முடிந்தது. குனிந்து பார்த்தால் கீழே ஒரு விசாலமான மண்டபம் தெரிந்தது. ஆகா! சக்கரவர்த்தியின் சயனக் கிரஹம் அல்லவா இது? ஆம் அதோ சக்கரவர்த்திதான் படுத்திருக்கிறார் தன்னந் தனியாகப் படுத்திருக்கிறார். மேலும் ஏதோ அவர் புலம்புகிறார் என்னவென்று கேட்கலாம்.

"அடி பாவி! உண்மைதானடி! நான் உன்னைக் கொன்றுவிட்டது உண்மைதான்! வேண்டுமென்று கொல்லவில்லை, ஆனாலும் உன் சாவுக்கு நான்தான் காரணம். அதற்கு என்னச் செய்யச் சொல்கிறாய்? வருஷம் இருபத்தைந்து ஆகிறது. இன்னமும் என்னை விடாமல் சுற்றுகிறாயே? உன் ஆத்மாவுக்குச் சாந்தி என்பதே கிடையாதா? எனக்கும் அமைதி தரமாட்டாயா? என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டுமோ சொல்! அதன்படி செய்து விடுகிறேன். என்னை விட்டுவிடு! ஐயோ! என்னை இவளுடைய கொடுமையிலிருந்து விடுவிப்பார் யாருமில்லையா? எல்லோரும் என் உடல் நோய்க்கு மருந்து தேடுகிறார்களே! என் மன நோயை தீர்த்துக் காப்பாற்றுவார் யாரும் இல்லையா! போ! போ! போய்விடு! இல்லை, போகாதே! நில்! நான் என்ன செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போ! இப்படி மௌனம் சாதித்து என்னை வதைக்காதே! வாயைத் திறந்து ஏதாவது சொல்லிவிட்டுப் போ!"

இந்த வார்த்தைகள் வானதியின் காதில் இரும்பைக் காய்ச்சி விடுவதுபோல் விழுந்தன. அவளுடைய உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் குலுங்கியது. தன்னையறியாமல் கீழே குனிந்து பார்த்தாள். மண்டபத்தில் நாலாபுறமும் அவளுடைய பார்வை சென்ற வரையில் பார்த்தாள்.

சக்கரவர்த்திக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அது பெண்ணின் உருவம் பாதி உருவந்தான் தெரிந்தது. பாக்கிப் பாதி தூண் நிழலிலும் அகில் புகையிலும் மறைந்திருந்தது. தெரிந்த வரையில் அந்த உருவம் ஆ! பழுவூர் இளையராணியைப்போல அல்லவா இருக்கிறது? இது என்ன கனவா! சித்த பிரமையா? இல்லை ! உண்மையே தான்! அதோ அந்தத் தூண் மறைவில் ஒளிந்து நிற்பது யார்? பெரிய பழுவேட்டரையர் அல்லவா? (தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு

## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# உடற்பயிற்சியின் அவசியம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி நாம் நோயின்றி சுகமாய் இருக்க வேண்டுமாயின் நமது உடல் உறுதி அடைய வேண்டும். உடம்பு உறுதியடைவதற்குச் சுத்தமான காற்று, சுத்தமான நீர், நல்ல உடை, உடற்பயிற்சி என்பன அவசியமாகும். உடற்பயிற்சி செய்வதனால் நமது உடம்பில் உள்ள தசைநார்கள் உறுதியடைகின்றன.

உட்பயிற்சி செய்யும் பொழுது அதிகமான காற்றை உட் கொள்ளுகின்றோம். அதனால் இரத்தம் நன்கு சுத்தமடைகிறது. உடம்பில் உள்ள அழுக்குநீர் வியர்வையாக மாறி வெளியேறுகிறது. உணவு நன்றாகச் சீரணமாகிறது. ஞாபகசக்தி விருத்தியாகின்றது. உடல் உறுப்புகள் சோர்வு நீங்கி உற்சாகம் அடைகின்றன.

உடம்பில் உள்ள ஒவ்வோர் உறுப்புக்கும் பயன் உண்டாக்கத்தக்க உடற்பயிற்சிகள் பல உண்டு. அவற்றை நாம் நாளாந்தம் செய்து வந்தால் நமது உடல் உறுதியாவதோடு நோயற்ற வாழ்வு வாழவும் வழி சமைக்கும். சரீரத்திற்கு வலிமை தரும் விளையாட்டுக்கள் பல இருக்கின்றன. அவற்றை நாம் சுத்தமான காற்று வீசும் திறந்த வெளியில் மேற் கொள்ளல் வேண்டும்.உடற்பயிற்சி செய்யும் போது மூக்கினால் சுவாசித்தல் வேண்டும்.உணவு உண் டபின் உடற்பயிற்சி செய்தல் கூடாது.

வளரும் பருவத்தில் உடற் பயிற்சி உணவு நுகர்ச்சியையும் அதிகரிக்கச் செய்யம். எனவே உடல், உள விருத்திக்கு உடற் பயிற்சி இன்றியாமையாததாக விளங்குகின்றது. நாம் நாளாந்தம் அதன் அவசியத்தை உணர்ந்து கைக்கொள்ள வேண்டும். [illegible]

## காலம் பற்றிச் சிந்திப்போம்

நீங்கள் விதைக்கும் விதைகளைப் போல, நீங்கள் காலத்தையும், பொறுத்து அறுவடை அடைகிறது.

-சாயிபாபா

காலமும் இடமும் உன்னிடத்தில் தான் உள்ளது. அதேபோல் முன்னேற்றமும் உன்னிடத்தில்தான் உள்ளது.

- மாஜினி

காலம் நதியைப் போன்றது, ஓடுகிற நதியின் நீரை தொடுகிறாய் கடந்து சென்ற நீரின் கடைசிப் பகுதியாகவும் வந்து கொண்டிருக்கும் புது நீரின் முதற் பகுதியாகவும் நீ தொட்ட நீரைக் கருதலாம். காலமும் அப்படித்தான்.

-டாவின்சி

இறந்த காலத்தைப் பற்றித் தெரிந்து கொண்டால், எதிர்காலம் தானாகப் புலப்படும்.

-கன்பூசியல்

எதிர்காலத்தை நீ விரும்பினால் நிகழ்காலத்தில் ஒன்றும் மிச்சமில்லாமல் எவற்றையும் நீ தியாகம் செய்துவிட வேண்டும்.

-மாக்சிம்கார்க்கி

தயவு செய்து மதிப்புமிக்கதான உன்னுடைய பொழுதை வீணடிக்காதே எளிமையாக, தூய்மையாகக் கபடமின்றி இரு அடர்ந்த பிரார்த்தனை மூலம் ஆண்டவன் ஒருவனிடம் மட்டுமே அயராத நம்பிக்கை கொண்டிரு.

-சுவமி பஜனானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியும் அன்பும் நம்மிடமுள்ள பெரிய கவலைச் சுமையைப் போக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.
~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணிலுடன் மோதல் வலுப்பதால் ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகிறது

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்ற சொற்பதம் முன்னறி குறியை உணர்த்துவதாகும்.

ஆம், ஒரு நிகழ்வு அல்லது சம்பவம் நடைபெறப் போவதை உணர்த்துகின்ற அறிகுறிகள், வெளிப்பாடுகள் பற்றி நாம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்பதை எடுத்துரைப்பதற்காக நம் தமிழ் மொழி யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்ற சொற்றொடரைத் தந்தது.

ஆம், அறிகுறிகள், அடையாளங்கள் என்பனவற்றில் நம் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த அடிப்படையில் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மகிந்த தரப்புக்கும் இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அமைச்சரவை மாற்றத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிரடியாக ஏற்படுத்தியிருந்தார்.

அதிலும் குறிப்பாக, சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல அந்தப் பதவியில் இருந்து அகற்றப்பட்டமை மகிந்த தரப்புக்கு பலத்த அவமானத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதை நாம் கூறும்போது முன்னதாக ஜனாதிபதி ரணிலுக்கும் மகிந்த தரப்புக்கும் இடையில் சுமுகமான உறவு இருந்ததா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

ஆயினும் ஆரம்ப கட்டங்களில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மகிந்த தரப்புக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு இருந்தது.

ஆனால் மகிந்த தரப்புக்கான எதிர்ப்பலை சிங்கள மக்களிடம் இருந்து மெல்ல மெல்ல தணிந்துபோக, மீண்டும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால், என்ன என்ற பேராசை மகிந்த தரப்பிடம் ஏற்பட்டுள்ளது.

எனவே ரணில் விக்கிரமசிங்கவிடம் குத்தகைக்கு ஒப்படைத்த ஜனாதிபதிப் பதவியை அவர் தனக்குச் சாதகமாக ஆக்கிக் கொண்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

இப்போது தாங்கள் கொடுத்த பதவி என்பதால் தங்களை ஜனாதிபதி ரணில் அனுசரித்துப் போகிறார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றால், அதன்பின்னர் தங்களின் சொல்லுக்கு அவர் கட்டுப்படமாட்டார்.

எனவே ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகின்ற இந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உபத்திரவம் கொடுத்தால் மட்டுமே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கான வெற்றி வாய்ப்பை உடைக்க முடியும் என்பது மகிந்த தரப்பின் தீர்மானம்.

இதனடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரைத் திட்டித் தீர்த்துள்ளார்.

உடல் நல ஆரோக்கியம் குன்றியுள்ள மகிந்தவின் திட்டலில் திருப்தியடையாத பசில் ராஜபக்ஷ இப்போது தானே நேரடியாக ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்படவும் அவரை கண்டிக்கவும் தலைப்பட்டுள்ளார்.

ஆக, இந்த அறிகுறிகள் ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதையும் அதில் பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பசில் ராஜபக்ஷ என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.

# மருந்துகளின் தட்டுப்பாடுகளால் மட்டுப்படுத்தப்பட்ட சத்திரசிகிச்சைகள்

## அகில இலங்கை தாதியர் சங்கம்

(கொழும்பு)

**மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

குறித்த பிரச்சினைகளை தீர்க்க இதுவரை சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த சங்கத்தின் பொதுச் செயலர் எஸ்.பீ.மெதிவத்த குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரத் துறையில் நிலவும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் 48 இலங்கையர்கள் புலனாய்வு அமைப்புகளின் தீவிர விசாரணையில் தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் 48 குற்றவாளிகளில் 30 பேர் நேரடியாகவும் மறைமுகமாகவும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வு அமைப்புகள் மேற்கொண்ட தீவிர விசாரணைகளில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பிரதானமாக ஐந்து பேர் இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வருவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தக் குழு தொடர்பில் சார்க் நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-6)

## கைது நடவடிக்கையை கண்டித்து

# வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்த இராமேஸ்வர விசைப்படகு மீனவர்கள்

(முறிகண்டி)

இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையை கண்டித்தும் மத்திய, மாநில அரசை கண்டித்தும் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதாக இராமேஸ்வர விசைப்படகு மீனவர்சங்கம் அறிவித்துள்ளது.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து நேற்று கடலுக்குச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படை எல்லை தாண்டி வந்ததாக கூறி ஐந்து விசைப்படகுகளையும் அதிலிருந்து 37 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறைப்பிடித்து சென்றுள்ளனர். இதனை கண்டிக்கும் விதமாக இராமேஸ்வரம் துறைமுகத்தில் நடந்த மீனவர்களின் அவசர கூட்டத்தில் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மீனவர்கள் அறிவித்ததோடு நவம்பர் 3ஆம் திகதி ரயில் மறியலில் ஈடுபடுவதாகவும் அறிவித்துள்ளனர் அத்துடன் நவம்பர் 6ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபடபோவதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். (நி-6-100)

## 2025 முதல் புதிய வரி
### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

புதிய சொத்து வரி அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2025ஆம் ஆண்டு முதல் இந்த வரி நடைமுறைப்படுத்தப்படும்.

அதிகளவு சொத்துக்களை வைத்திருக்கும் மக்களிடம் இருந்து இந்த வரி அறவிட எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய, அதற்கான வரியை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ரஞ்சித் சியம்பலாபிட்டியே சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## மின்கட்டண உயர்வை மீள்பரிசீலனை செய்யுங்கள்

### பேக்கரி உரிமையாளர் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்யா விட்டால் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையினை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மின்சார கட்டண உயர்வால் தமது தொழிற்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

மின்சார கட்டணம் 400 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. அதனுடன் 36 சதவீத வருமான வரியும் 15 சதவீத வற்வரியும் செலுத்தப்பட வேண்டும்.

பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையை மேலும் அதிகரித்தால் நுகர்வோர் கொள்வனவு குறைவடையும்.

இதனால் தமது தொழிற்துறை மேலும் சிக்கலை எதிர் நோக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

பேக்கரி உற்பத்திகளின் விலையினை தற்போதைய மட்டத்தில் தொடர்ந்தும் பேணுவதனால் அரசாங்கத்தின் மின்சாரக் கட்டண உயர்வு மற்றும் வரிக் கொள்கை தீர்மானங்கள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என என்.கே.ஜயவர்தன குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

23

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### புவிராஜ பண்டாரம் (1572-1591)

புவிராஜ பண்டாரம் 1572 களின் தொடக்கத்திலிருந்து 1591 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னனாவார். பெரிய பண்டாரம் என்னும் அரசனுக்குப் பின் அரசு கட்டிலேறிய இவர் அக் காலத்தில் யாழ்ப்பாண அரசில் செல்வாக்குச் செலுத்திய போர்த்துக் கேயர்களுக்கு ராஜ எதிரியாக திகழ்ந்தவர்.

போர்த்துக்கேயர் கைப்பற்றி வைத்திருந்த யாழ்ப்பாணத்துக்குச் சொந்தமான மன்னார்த்தீவில் இருந்து அவர்களைத் துரத்தி அவ் விடத்தை விடுவிப்பதில் புவிராஜ பண்டாரம் தீவிரமாக இருந்ததாகத் தெரிகிறது. 1590 ஆம் ஆண்டு வாக்கில் பெரும் படையுடனும், ஆயுத தளவாடங்களுடனும் மன் னாரைத் தாக்கினார். இருந்தும், அக் காலத்து நவீன ஆயுதங்களைக் கையாள்வதில் யாழ்ப்பாணத்துப் படைகளுக்குப் போதிய பயிற்சி இல்லாததாலோ என்னவோ இம் முயற்சியில் புவிராஜ பண்டாரத் துக்கு வெற்றி கிட்டவில்லை. 1591 ஆம் ஆண்டில் மீண்டும் தென்னிந் தியக் கப்பல் தலைவனான கொட்டி மூசாமரிக்கார் என்பவனோடு சேர்ந்து கொண்டு மன்னாரைத் தாக்க முயற்சித்தும் மீண்டும் அவருக்குத் தோல்வியே கிடைத் தது.

புவிராஜ பண்டாரத்தைத் தண் டிக்க எண்ணிய போத்துக்கீசர் 1591 ஆம் ஆண்டில் அந்தரே பூர்த்தாடு என்பவன் தலைமையில் யாழ்ப்பா ணத்தின் மீது படையெடுத்தனர். நிகழ்ந்த போரில் நல்லூருட் புகுந்த போத்துக்கீசர் படை அரசனைப் பிடித்தனர். அரச துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட அவன் தலை கொய் யப்பட்டு இறந்தான்.

### போர்

1591 ஒக்டோபர் இறுதியில் மன்னாரில் இருந்து, 1400 போர்த் துக் கேயரும், 3000 சிங்கள வரும் அடங்கிய பெரும்படையுடன் அந்தரே பூர்த்தாடோ யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டான். இந்தப் படையெடுப்புக்காக மன்னார்ப பகுதியில் முத்துக்குளிப்பினால் பெறப்பட்ட 30,000 பர்தாங்கும், மன்னார்க் கத்தோலிக்கரிடம் கடனாகப் பெறப்பட்ட 20,000 பர்தாங்கும் பணமாக பயன்படுத் தப்பட்டதாகத் தெரிகிறது. 43 கப்பல் களிலும், 200இற்கு மேற்பட்ட தோணிகளிலும் இப்படைகள் சென்றன. யாழ்ப்பாணத்து அரசன் இப்படைகள் ஊர்காவற்றுறையில் இறங்கும் என எதிர்பார்த்து அங்கே பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந் தான். ஆனால், போர்த்துக் கேயப் படைகள் கொழும்புத்துறையை அடைந்தன. கப்பல்களில் இருந்து கனரகப் பீரங்கிகள் தாக்குதல் நடத்த முதலில் 150 போர்த்துக்கேயரும், 200 சிங்களப் படையினரும் கரை யில் இறங்கினர். எதிர்த் தாக்குதல் நடத்திய யாழ்ப்பாணப் படைகள் கடுமையான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோல்வி யைச் சந்தித்தன. முதலியார் பிராங் கோவும் 250 பேரும் இறந்தனர். ஏராளமான ஆயுதங்கள் போர்த்துக் கேயர் வசமாயின. பின்னர் போர்த் துக்கேயரின் படைகள் முழுவதும் கரையிறங்கின. கரை யோரமாக நடந்து வந்த படைகள் பண்ணைக் கருகில் முகாமிட்டன. இப்பகுதியில் இருந்த முஸ்லிம்களின் வணிக நிலையில் இருந்த களஞ் சியங்களில் சேமிக்கப்பட்டிருந்த அரிசி, நெல் ஆகியவற்றையும் அவர்கள் கொள் ளையிட்டனர்.

அடுத்தநாள் அதிகாலை அங்கி ருந்து போர்த்துக்கேயப் படைகள் நல்லூரை நோக்கிப் புறப்பட்டன. வழியில் அமைக்கப்பட்டிருந்த தாக் குதல் நிலைகளில் இருந்து யாழ்ப் பாணப் படைகள் தாக்குதல் நடத் தின. பல மணி நேரம் நடந்த போரில் யாழ்ப்பாணப் படைகளின் எதிர்த்தாக்குதலைப் போர்த்துக் கேயப்படைகள் முறியடித்தன. யாழ்ப் பாணப்படைகளின் எதிர்த்தாக்கு தலை வழி நடத்திய, பின்னாள் அரசன் எதிர்மன்ன சிங்கத்தின் சகோதரனான இளவரசன் காகோ இவ் விடத்தில் கொல்லப்பட்டான். போர்த்துக்கேயப் படைகள் மீண்டும் நல்லூரை நோக்கி முன்னேறின. நல்லூரில் வீரமாகாளியம்மன் கோயிலுக்கும், கந்தசுவாமி கோயி லுக்கும் இடையே மீண்டும் கடும் போர் வெடித்தது. இங்கும் போர்த் துக்கேயரின் ஆயுதபலம் வெற்றி பெற்றது.

இப்போரில் கொல்லப்பட விருந்த பெரிய பிள்ளையின் மகன் இளவ ரசன் எதிர் மன்னசிங்கம் போர்த்துக்கேயத் தளபதி ஒருவனால் காப்பாற்றப்பட்டான். அரசனைத் தேடிச்சென்ற போர்த்துக்கேயப் படைகள் தப்பிச் செல்ல முயன்ற அவனைப் பிடித்து அந்தரேபூர்த் தாடோ முன் கொண்டு சென்றனர். பூர்த்தாடோவின் கட்டளைக் கிண ங்க அரசனின் தலை வெட்டப் பட்டு ஈட்டி முனையில் குத்தப்பட்டுச் சில நாட் கள் அங்கேயே விடப்பட்டது. போர்த் துக்கேயப் படையினர் அரசனின் அரண்மனைக்குள் நுழைந்து அத னைக் கொள்ளையிட்டனர். அங் கிருந்த அரசனின் மனைவி மார்கள், பிள்ளைகள், பேரப்பிள ளைகள், முந்திய அரசர்களின் பிள்ளைகள், பிற அரச குடும்பத்தினர் எனப்பலர் அரண்மனையில்பிடிபட்டனர்.

போர்த்துக்கேயரின் எதிரிகளும், வெளிநாட்டுப்போர் வீரர்களும் இராச்சியத்தில் இருக்கக் கூடாது என்னும் எண்ணத்தில், போரின் முடிவில் எஞ்சியிருந்த 800 படகர்க ளும், கோழிக் கோட்டைச் சேர்ந்த சில முஸ்லிம்களும் தலைவெட்டிக் கொல்லப்பட்டனர். அரசனின் பயன் பாட்டுக்காக இரண்டு படகுகளை மட்டும் விட்டு விட்டுத் துறைமுகங் களில் இருந்த எல்லாப் படகுகளும் எரிக்கப்பட்டன. போர்த்துக்கேயரின் 3 கப்பல்களும், 100 போர்த்துக்கேயப் படையினரும், 200 சிங்களப் படையினரும் யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

### விளைவுகள்

எதிர்மன்ன சிங்கம், பரராசசேகர பண்டாரம் என்னும் பெயருடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரச னாகப் போர்த்துக் கேயரால் அறிவிக் கப்பட்டான். போர்த்துக்கேயரின் முதலாம் யாழ்ப்பாணப்படையெடுப் பின் பின்னர் கடுமையான நிபந் தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் ஒன்றுக்கு சங்கிலி மன்னன் ஒப்புக் கொண்டிருந்தான். எனினும், சங்கி லியின் தந்திரத்தாலும் உள்ளூர் மக்களின் கிளர்ச்சியாலும் போர்த் துக்கேயர் தப்பி ஓட வேண்டி இருந் ததால், சங்கிலி இருக்கும் வரை ஒப்பந்தத்தை நிறைவேற்றும் படி நிர்ப்பந்திக்கப் போர்த்துக் கேயரால் முடியவில்லை.

அதன் பின்னர் வாரிசுப் பிரச்சி னைகளால் போர்த்துக் கேயரின் தலையீடு இருந்த போதும், ஒரு கால கட்டத்தில் திறை செலுத்த வேண் டியிருந்தும், அக்கால யாழ்ப்பாண மன்னர்கள் சிலர் போர்த்துக் கேயருக்குப் பெரிய அளவில் விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால், இரண் டாம் படையெடுப்புக்குப் பிந்திய நிலைமை சற்று வேறுபட்டது. 1591 ஆம் ஆண்டின் ஒப்பந்தம் யாழ்ப் பாண இராச்சியத்தின் இறைமையை மீட்பதற்கு அரசனுக்கு இருக்கக் கூடிய எல்லா வாய்ப்புக்களையும் இல்லாமல் ஆக்குவதாக அமைந் தது. அரசன் கத்தோலிக்க மதத்துக்கு மாறுவதுடன், அவனது குடி மக்க ளும் மதம் மாற உதவுவதாகவும் உடன்பட வேண்டியிருந்தது. யாழ்ப் பாணத்தில் மத மாற்ற நடவடிக் கைகள் தீவிர மடைந்தன. போர்த் துக்கேயக் குருமாரும், அதிகாரி களும் அரசன் மீது பெரும் அழுத்த ங்களை ஏற்படுத்தி வந்தனர்.

போர்த்துக்கேயரின் இரண்டாம் யாழ்ப்பாணப் படையெடுப்பின் போது இளவரசன் எதிர் மன்ன சிங்கத்தை போர்த்துக்கேயத் தளபதி ஒருவன் காப்பாற்றும் காட்சியைக் காட்டும் சிற்பம், இரத்தினபுரி மகாசமன் தேவாலயத்தில் உள்ளது.

### எதிர்மன்ன சிங்கம் (1591-1615)

எதிர்மன்னசிங்க பண்டாரம் அல்லது எதிர்மன்னசிங்கன் (இறப்பு 1617) என்பவன் 1591 இற்கும் 1616க்கும் இடையில் யாழ்ப்பா ணத்தை ஆண்டவனாவான். இவன் பரராச சேகரன் என்னும் அரிய ணைப் பெயருடன் எட்டாம் பரரா சசேகரன் என்ற பெயரில் முடிசூட் டப்பட்டவன். இவன், 1570களில் யாழ்ப்பாணத்து அரசனாக இருந்த பெரியபிள்ளை என்பவனின் மக னாவான்.

எதிர் மன்னசிங்கத்தின் தந் தையான அரசன் பெரிய பிள்ளை இறந்தபோது எதிர் மன்னசிங்கத் துக்குரிய வாரிசு உரிமையையும் தாண்டி புவிராஜ பண்டாரம் என்பவன் மன்னனானான். இதற் கான காரணம் தெரியவில்லை. போத்துக்கீசரைப் பகைத்துக் கொண் டதால் யாழ்ப்பாணம் மீது படை யெடுத்த போத்துக்கீசர் புவிராஜப ண்டாரத்தைப் பிடித்துக் கொன்ற னர். எதிர்மன்ன சிங்கம், புவிராஜ பண்டாரத்துக்குச் சார்பாகப் போரிற் கலந்து கொண்டபோதும், கொல் லப்படும் தறுவாயில் போத்துக்கீசன் ஒருவனாற் காப்பாற்றப்பட்டான். இவன் பெரிய பிள்ளையின் மகன் என்றும், பட்டத்துக்குரிய இளவ ரசன் என்பதையும் அறிந்த போத் துக்கீசத் தளபதியான அந்தரேபூர்த் தாடு, எதிர்மன்ன சிங்கத்தை யாழ்ப்பாண அரசன் ஆக்கினான்.

### எதிர்ப்பு

கடுமையான போத்துக்கீச மேலா திக்கத்தின் கீழ் நாட்டை ஆண்ட இவன் போத்துக்கீசரின் எல்லா நட வடிக்கைகளுக்கும் இடம் கொடுத் தான். தன்னுடன் பழகி வருகின்ற போத்துக்கீசர்களுக்குக் கொடை களும் அளித்து அவர்களைப் பகையாது இருந்தான். எனினும், போத்துக்கீசக் கீழ் நிலை அதிகாரி களினால் இவனுக்குப் பல தொல் லைகள் விளைந்ததுண்டு. கத் தோலிக்கமதத்தைப் பரப்பும் நட வடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பாதிரி மார்கள் இவனுக்கு ஆதரவாக இருந்தனர். இவர்கள் நல்லூரில் தேவாலயம் கட்டுவதற்கு இவனே நிலமும் பணமும் அளித்துள்ளான். அத்துடன், இப்பாதிரிமார்களிற் சிலரும் பிற அதிகாரிகளும் செய்த முறைகேடான செயல்களையும் அவன் கண்டும் காணாதிருந் தான். இதனால், நாட்டில் அவ னுக்கு எதிர்ப்பு வலுத்தது.

இதனால், எதிர்மன்ன சிங் கத்தை நீக்கிவிட்டுத் தஞ்சாவூ ரிலுள்ள இளவரசன் ஒருவனை அரசனாக்கும் திட்டமொன்றும் உருவானது. இதை அறிந்த எதிர் மன்னசிங்கம், போத்துக்கீசரை அணுகி அவர்கள் துணையுடன் தன் பதவியைத் தக்க வைத்துக் கொண்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

கொடுப்பனவுகளை எதிர்காலத்தில் இணையத்தளம் ஊடாகவே மேற்கொள்வதற்கான முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் கீழ் மக்கள் மதிப்பீட்டு வரி உள்ளிட்ட பல்வேறு கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

இந்த புதிய வேலைத்திட்டம் 2024 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களின் கீழே இவற்றின் நிர்வாகம் தற்போது இடம்பெற்று வருகின்றமையும் சுட்டிக் காட்டத்தக்கது. (ந-7)

## தமிழரசுக் கட்சி...

அனைத்து மேல்மட்ட நிர்வாகக் கட்டமைப்பிலும் ஏற்படுத்தப்பட வேண்டும் என தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், வடமாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் விடுதலைப் பயணத்தில் பங்கெடுத்து வருகின்ற அரசியல் தரப்புக்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மூத்த கட்சியாகவுள்ளது.

இந்தக் கட்சியின் அண்மைக்கால அடைவுமட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களும் வாதப்பிரதிவாதங்களும் விமர்சனங்களும் காணப்படுகின்றன.

அந்தவகையில் கட்சியை அடுத்து வரும் தலைமுறையிடம் முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் அணுகு முறை மாற்றம் அவசியமாக உள்ளது.

எனவே, வெளிப்படைத்தன்மையுடன் கட்சியில் அணுகுமுறை மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் தலைமைத்துவ மாற்றம் அவசியமாகின்றது என்றார். (ந-7)

## நவம்பர் 13இல்...

பாராளுமன்ற நாட்காட்டியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அதன் இரண்டாம் வாசிப்புக்கான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு நடைபெறவுள்ளதுடன், நவம்பர் 21ஆம் திகதி மாலை 06.00 மணிக்கு வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதி வரை 19 நாட்களுக்கு நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இறுதியாக இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தால் அதிருப்தி அடைந்துள்ள ஆளும் தரப்பான பெரமுன வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காவிடின் ஆதரவு வழங்கப் போவதில்லை என எச்சரித்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ந-7)

## குடும்பஸ்தர்...

யளவில் இந்தக் கொடூரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய தம்பிப்பிள்ளை மார்க்கண்டு என்ற குடும்பஸ்தரே அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அதே பகுதியில் வசித்து வரும் 31 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கேப்பாப்பிலவு இராணுவ முகாமில் பணியாற்றுபவர் என ஊர் மக்கள் தெரி விக்கின்றனர். பணப் பரிமாற்றம் தொடர்பான தகராறால் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இதன்போது சந்தேகநபர் பொல்லாலும் கோடரியாலும் வயோதிபர் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் சம்பவத்தில் சந்தேக நபரும் காயமடைந்துள்ளமையால் அவர் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## மின்சாரம் தாக்கி...

(வயது-24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த் இளைஞன் கரம் சுண்டல் விற்பனை செய்யும் வண்டில் ஒன்றுக்கு மின் இணைப்புச் செய்துவிட்டு, மின்சாரத்தைக் கொடுத்தபோது மின்சாரம் அவர் மீது பாய்ந்தது.

இதனையடுத்து உடனடியாக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ந-7,104)

## வ.செ.திட்டத்தை...

துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின்போது அதனைத் தோற்கடிக்காமல், குழுநிலை விவாதத்தின்போது சில அமைச்சுக்களின் ஒதுக்கீடுகளை தோற்கடிக்க பொதுஜன பெரமுன வின் குழுவொன்று இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதால் பாராளுமன்றத்தை கலைப்பது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்துவார்.

குறிப்பாக குழுநிலை விவாதத்தின்போது சில அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகளை தோற்கடிப்பதன்ஊடாககுழப்பத்தை ஏற்படுத்த முடியும் என பொதுஜன பெரமுனவின் குழுவொன்று எதிர்பார்த்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கருத்து மோதல்கள் உக்கிரமடைந்துள்ளன. இவர்கள் ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மறுசீரமைப்பில் ஆளும் பெரமுன தரப்புக்கு உரிய அமைச்சுப் பதவிகள் கிடைக்கவில்லை என்ற அதிருப்தியில் வரவு- செலவுத் திட்டத்தின் சில ஒதுக்கீடுகளை தோற்கடிக்கும் முயற்சிகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பொதுஜன பெரமுனவில் ஒரு சிலரின் செயல்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவிடம் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-7)

## அடுத்த பாராளு...

உப தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜேலால் தெரிவித்தார். எனவே, தற்போதையதை விடவும் குழப்பகரமான தொங்கு அரசாங்கமே அமையக்கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அடுத்த தேர்தல்களில் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை. கூட்டணி அமைப்பது தொடர்பில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனினும், மக்கள் மற்றும் கட்சிக்கு நன்மை பயக்கும் வகையில் எமது முடிவு அமையும். அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் பல அணிகள் இருப்பதால் வாக்குகள் பிரிந்து செல்லும். எந்தவொரு கட்சியாலும் 75 ஆசனங்களுக்கு மேல் கைப்பற்ற முடியாத நிலையே ஏற்படும். ஆட்சி அமைப்பதற்காகச் கூட்டு சேர வேண்டும்" என்றார். (7)


கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3524 — சீட்டிழுப்பு திகதி 29.10.2023 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 21 59 73 76 — C — 04784 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி - 2023.10.29 — சீட்டிழுப்பு இலக்கம் - 1312 — Y 02 19 48 61 Y — Double Chance 16861

லக்கி 7 — திகதி 29.10.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0108 — L7 இலக்கம் 2 8 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 7 1 5 9 6 0

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.29 — சீட்டிழுப்பு இலக்கம் 591 — கும்பம் 01 19 43 50 கும்பம்

மெகா பவர் — திகதி 29/10/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1630 — M 13 08 09 61 79 — 54665

மஹஜன சம்பத — திகதி 2023/10/29 — சீட்டிழுப்பு இலக்கம் 5282 — R 4 6 2 9 3 4 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2256 — வர்ணம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.10.29 — தினம் ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 05 13 29 43 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,290,244/- — DLB

சனிதா — திகதி 2023.10.29 — வெற்றி வாரம் 4417 — வர்ணம் இளஞ்சிவப்பு — 21 26 51 66 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,160,900.00 — 3 3 4 8 7 — DLB

சசிரி — வெற்றி வாரம் 395 — சீட்டிழுப்பு திகதி 2023.10.29 — கபிலம் — வெற்றி இலக்கங்கள் 10 24 36 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,679,280/- — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3968 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 2023.10.29 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 12 34 42 46 — கன்னி — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,702,787.20 — 295596 — 343 — DLB

திகதி 29.10.2023 — வெற்றி வாரம் 1432 — வர்ணம் மஞ்சள் — I 39 17 30 61 69 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 458,214,294.20 — 746517 — 932 — DLB தொலை பேசி 011-2 333 546-47 Web : www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் : 2082 — வர்ணம் : இளம் பச்சை — சீட்டிழுப்பு திகதி : 2023.10.29 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,229,072/- — 11 29 64 76 M — 551874 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு




## திரு. குமாரசாமி இந்திரகுமார்

B.A(Jaffna), P.G.D in Child Protection(Rajarata)
நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்
நீதி நிர்வாகப் பிரிவு, மல்லாகம்

*கலகலப்புடன் அனைவரையும் கவர்ந்திழுக்கும் நாயகன்
காலத்தால் அழியாத பாடல்களைக் கலைநயத்துடன் பாடிடும்,
நட்புடன் நலம் விசாரித்திடும் நல்மனத்துடையோன் - நீவீர்
ஓய்வு காலத்தில் நல்லாரோக்கியத்துடன் வாழ்ந்திடவும்
தம் வாழ்வினில் மென்மேலும் சிறந்துவிளங்கிடவும்
வாழ்த்துக்களை இயம்புகின்றோம் - வாழிய நீடூழி.*

(C-7521)


**சேவை விபரம்**

- முகாமைத்துவ உதவியாளர்
  மாநகர சபை, யாழ்ப்பாணம்.
  பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.
  1992.05.18 - 2005.09.06 வரை
- நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்
  பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.
  2005.09.07 - 2009.02.24 வரை
- நன்னடத்தை உத்தியோகத்தர்
  வேலணை பிரதேச செயலகப் பிரிவு
  2009.02.25 - 2012.06.12 வரை
  ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு
  2012.06.13 - 2015.03.29 வரை
- நிலையப்பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர்
  பருத்தித்துறை நீதி நிர்வாகப் பிரிவு
  2015.03.30 - 2019.08.06 வரை
  மல்லாகம் நீதி நிர்வாகப் பிரிவு
  2019.08.07 - 2023.04.30 வரை

வாழ்த்துவோர்: நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாணம்.

# மரண அறிவித்தல்

## திரு.
## றப்பியால் அரியதாஸ் (புத்தா)
## AMT Motel (Colombo) - உரிமையாளர்



தோற்றம் 11.11.1948 | மறைவு 27.10.2023

யாழ்.குடத்தனை, பொற்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.றப்பியால் அரியதாஸ் அவர்கள் 27.10.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற றப்பியால் - நேசம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை - ஞானம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி றெஜினா (அன்னக்கிளி) அவர்களின் அன்புக் கணவரும் செல்வதாஸ் (நியூஸ்லண்ட்), புஸ்பதாஸ், அருள்தாஸ்(சுவிஸ்), இதயதாஸ் (லண்டன்), ஸ்ரெலா(நியூஸ்லண்ட்), அனுஸ்ரெலா (நியூஸ்லண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் டயானா, சங்கீதா, கஸ்தூரி, கெசியர், றொஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும் றிஸ்மிகா, கர்ஷா, அஷாப், அபியா, இக்ஷனா, லயாஸ், அதர்னா, கல்ஸ்ரன், கென்றிக் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான பொடி மாட்டீன், லட்சுமி, தருமதாஸ், சுகததாஸ், குணத்தி மற்றும் சோபா, ஞானதாஸ், ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தேவரட்ணம் (தேவகிளி), டேவிட், றெஜினா இராஜேஸ்வரி(குஞ்சம்மா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 31.10.2023 (செவ்வாய்க்கிழமை) பி.ப 1.00 மணிக்கு குடத்தனை, பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ். குடத்தனை,
பொற்பதி.

அ.செல்வதாஸ்
077 639 6186

(C-7520)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org